நாள்: 10.07.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

தினமலர்

### வரத்து குறைவால் அரிசி விலை உயர்வு

**தேனி**:தேனி மார்க்கெட்டில் ஒரு கிலோ அரிசி 58 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விலை மேலும் அதிகரிக்கும் என தெரிகிறது.தமிழகத்தில் நான்காவது ஆண்டாக பருவமழை பொய்த்துள்ளது. ஜூலை 2வது வாரத்தை எட்டிய நிலையிலும் தென்மேற்கு பருவமழை பெய்யவில்லை. தேனி மாவட்டத்தில் வயல்களில் நாற்றுகளை நட விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.டெல்டா பகுதிகளிலும் முதல் போக நெல் சாகுபடி,கேள்விக்குறியாகி உள்ளது. அப்படியே முதல்போக நெல் சாகுபடி நடந்தாலும், அறுவடைக்கு வர இன்னும் நான்கு மாதங்கள் வரை ஆகும். வரும் நான்கு மாதங்களுக்கு மார்க்கெட்டிற்கு நெல் வரத்து இருக்காது.தற்போதைய நிலையில், நெல் இருப்பு குறைந்துள்ளதால் விலை அதிகரித்து வருகிறது. ஒன்றரை ஆண்டு பழைய ராஜபோகம் அரிசி (மணச்சநல்லூர் பொன்னி) சில்லரை மார்க்கெட்டில் கிலோ 58 ரூபாய்க்கும்,ஆறு மாத பழசு கிலோ 52 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. டீலக்ஸ் (பிபிடி) அரிசி பழசு கிலோ 42 க்கும்,புதுசு 36 ரூபாய்க்கும் சில்லரை மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல் செல்லப்பொன்னி அரிசி பழசு கிலோ 34 க்கும்,புதுசு 30 ரூபாய்க்கும், ஒட்டு செல்லப்பொன்னி கிலோ 30 ரூபாய் வரையும், சி.ஆர்., இட்லி அரிசி 32 ரூபாய் வரையும், கர்நாடகா பொன்னி ஸ்டீம் அரிசி ஒரு வருட பழசு கிலோ 50 க்கும், ஆறு மாத பழசு 42 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.ஐ.ஆர்.,20 பச்சை அரிசி 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை மார்க்கெட்டில்

விலை உயர்வால் அரிசி விற்பனை மந்த நிலையில் உள்ளது.இருப்பினும் அறுவடைக்கு இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. நவ.,முதல் நெல் வரத்து தொடங்கும் என்பதாலும், கிலோவிற்கு 2 ரூபாய் வரை அரிசி விலை,மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தாமதம்

**மேட்டூர்**: கர்நாடக நீர்பிடிப்பு பகுதிகளில், பருவமழையின் அளவு குறைந்து விட்டதால், கர்நாடகா அணைகளுக்கு, நீர்வரத்து குறைந்து விட்டது. மொத்தம், 49 டி.எம்.சி., கொள்ளளவு கொண்ட, கே.ஆர்.எஸ்., அணையில், தற்போது, 11 டி.எம்.சி., மட்டுமே, நீர் இருப்பு உள்ளது; 19 டி.எம்.சி., கொள்ளளவு கொண்ட கபினி அணையில், 11 டி.எம்.சி., நீர் உள்ளது.மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று,48 அடியாகவும்; நீர் இருப்பு, 16 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. நீர்வரத்து குறைவால், கர்நாடகா அணைகளின் நீர்மட்டம் அதிகரிக்கவில்லை. கர்நாடகா அணைகள் நிரம்பி, உபரி நீர், காவிரியில் திறக்க, தாமதம் ஆகும். இதனால், மேட்டூர் அணைக்கு, நீர்வரத்து மேலும்

தாமதமாகும்.

## தக்காளி விலை விர்... ஒரு கிலோ ரூ.50



**தேவாரம்**: தேனி மார்க்கெட்டில் வீரிய ஒட்டு ரக தக்காளி விலை உயர்ந்தது. சில்லரை விற்பனையில் ஒரு பழம் 5 ரூபாய்க்கும், கிலோ 50 ரூபாய்க்கும்

விற்கப்படுகிறது.தேனி மாவட்டத்தில், கூடலூர் முதல் போடி வரையிலான இறவை பாசன நிலங்களிலும், ஆண்டிபட்டி,பெரியகுளம் பகுதியிலும் தக்காளி பயிரிடப்படுகிறது. தேனி, சின்னமனூர், கம்பம், தேவாரம் உள்ளிட்ட பகுதிகளில் தினசரி காய்கறி சந்தை செயல்படுகிறது. இங்கு கொள்முதல் செய்யப்படும் தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் கேரளா, மதுரை, திருச்சி, சென்னை, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த சில நாட்களாக, ஏறுமுகமாக இருந்த தக்காளி, நேற்று, அதிரடியாக விலை உயர்ந்து,மொத்த விற்பனையில் ஒரு பெட்டி (14 கிலோ எடை கொண்டது) 400 ரூபாய்க்கு மேல் விற்பனையானது. சில்லரையில், ஒரு கிலோ 50 ரூபாயாக உயர்ந்தது.'கமிஷன்' கடைக்காரர்களால் கழிக்கப்படும் சில்லு தக்காளி ஒரு பெட்டி 150 ரூபாய் வரை விற்றது. தேவாரத்தை சேர்ந்த கமிஷன் கடை உரிமையாளர் ராஜா கூறியதாவது:தக்காளி விளையும் அனைத்து பகுதியிலும், மழையில்லாமல் கோடை போல வெப்பம் தகிக்கிறது. தக்காளி செடிகள் கருகி பலன் பிடிக்காமல் பூக்கள் உதிர்கின்றன. வரத்து குறைந்து விட்டதால் விலை உயர்கிறது.நேற்று முகூர்த்தம் என்பதால் தக்காளிக்கு 'கிராக்கி' அதிகரித்து, கிலோ 50 ரூபாய்க்கு விற்பனையானது.ஒரு பழத்தின் விலை 5 ரூபாயாக உயர்ந்ததால், தக்காளி ரசம் வைப்பதை பெரும் செலவாக கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு தேவாரம் மார்க்கெட்டிற்கு, பத்தாயிரம் பெட்டிக்கு மேல் தக்காளி வரத்திருக்கும்.தற்போது,700 பெட்டி தக்காளி வருகிறது. அவற்றிலும் கழிவு அதிகமாக உள்ளதால், வியாபாரிகள் தங்கத்தை போல தக்காளியை பாதுகாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது,என்றார்.

## விவசாயிகள் சங்கக் கூட்டம்

**திருவாடானை**: திருவாடானையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க, மாவட்ட கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் முத்துராமு, நாகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கடந்தாண்டு பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டதால் ராமநாதபுரத்தை, வறட்சி மாவட்டமாக அறிவித்து

நிவாரணம் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள 1200க்கும் மேற்பட்ட கண்மாய்கள், 30 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாராப்படாமல் உள்ளது. அனைத்து கண்மாய்களையும் தூர்வார வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் மண் பரிசோதனை முகாம்

**ரிஷிவந்தியம்** : ரிஷிவந்தியம் ஒன்றியம் பெரியபகண்டை மற்றும் மேலப்பழங்கூர் கிராமத்தில் மண்பரிசோதனை முகாம் நேற்று நடந்தது. மண்பரிசோதனை அலுவலர் மகாலட்சுமி, சமீதா, வினிதா வேளாண்மை அலு வலர் சுப்ரமணியம், ஷோபனா, சுஜாதா உதவி மேலாண்மை அலுவலர் இளவரசன், ஆய்வக உதவியாளர் மண்ணாங்கட்டி, சேகர் ரிஷிவந்தியம் மேலாண்மை உதவி இயக் குனர் தாமோதரன், அலுவலர் ஆனந்தன், ராமமூர்த்தி பெரியபகண்டை உதவி வேளாண்மை அலுவலர் துரைராஜன், அய்யப்பன் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்த மண்ணில் உள்ள கார அமிலம் , உப்புத் தன்மைகளை பரிசோதித்து அதற்கேற்றவாறு பயிரிட அறிவுறுத்தப்பட்டது.

## மூக்கனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம்

**சங்கராபுரம்** : சங்கராபுரம் வாசவி கிளப், கள்ளக்குறிச்சி கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மூக்கனூர் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. வாசவி கிளப் தலைவர் மகேந்திரன் தலைமை தாங்கினார். செயலாளர் சீனுவாசன் வரவேற்றார். கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் ராஜேந்திரன், சந்திரசேகர், சீனுவாசன், கருணாகரன், அரிதாஸ் புருஷோத்தமன் முன்னிலை வகித்தனர்.டாக்டர்கள் சுகுமார், துரைசாமி, சங்கர் கணேஷ் கலந்து கொண்டு 340 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். ஊராட்சி தலைவர் ஜோதி சேட்டு, மங்கையற்கரசி, மகேஸ்வரி மதியழகன், பவுல்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர். பொருளா ளர் கமலகண்ணன் நன்றி கூறினார்.

**பி.ஏ.பி., பிரதான கால்வாயில் சொட்டு நீர் பாசன திட்டம்; விவசாயிகள் எதிர்பார்ப்பு**

**பொள்ளாச்சி** : பி.ஏ.பி., திட்டத்தில், அனைத்து மண்டல பாசனத்திலும், அனைத்து நிலங்களுக்கும் பாசன வசதி பெறும் வகையில், குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகளின் எதிர்பார்க்கின்றனர்.

மேற்கு தொடர்ச்சி மலைகளில் உருவாகி, கடலுக்கு செல்லும் தண்ணீரை தேக்கி, மின் உற்பத்தி மற்றும் பாசனத்திற்கு பயன்படுத்தும் நோக்கில் பி.ஏ.பி., திட்டம் உருவாக்கப்பட்டது. தொகுப்பு அணைகளிலிருந்து பெறப்படும் தண்ணீரை பாசனத்திற்கே வழங்க, உடுமலை அருகே திருமூர்த்தி மலையில், அணை கடந்த 1962ம் ஆண்டு கட்டப்பட்டது. அணைக்கு மேற்கு தொடர்ச்சி மலை தொடரில் அமைந்துள்ள காட்டாறுகள், தொகுப்பு அணைகள் மூலம் காண்டூர் கால்வாய் வழியாகவும் நீர் வரத்து உள்ளது. அணையிலிருந்து வழங்கப்படும் பாசன நீரின் மூலம் கோவை, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட நான்கு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. விவசாயிகளுக்கு போதுமான தண்ணீரை வழங்கும் வகையில், நான்கு மண்டலமாக பிரிக்கப்பட்டு, வழங்கப்படுகிறது. பாசனத்திற்கு வழங்கப்படும் தண்ணீரைக்கொண்டு, தென்னை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

போதுமான தண்ணீர் கிடைத்ததால், பசுமையான பகுதியாக காணப்பட்டது. இந்நிலையில், பருவம் தவறிய மழை, கடும் வறட்சி போன்ற காரணங்களினால், அணையில் தண்ணீர் சேமித்து முறையாக வழங்குவதில் இடையூறு ஏற்பட்டு வருகிறது. இதன் விளைவு, பாசனத்திற்கு வழங்கப்படும் தண்ணீர் திருடப்படும் சம்பவங்களும் நடந்து வருகின்றன. கால்வாய் தண்ணீர் திருட்டு 100 சதவீதம் அதிகரித்துள்ளது. பாசன பிரதான மற்றும் கிளை கால்வாய்களையொட்டி,

குழாய்கள் அமைத்து தண்ணீர் திருடப்படுகிறது. இது போன்ற பல்வேறு பிரச்னைகளினால், தண்ணீர் கடைமடை வரை கொண்டு செல்வதில் சிக்கல் நீடிக்கிறது. வழக்குப்பதிவுகள் போட காலதாமதம்; பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் மற்ற துறை அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லாதது போன்ற பல்வேறு காரணங்களினால், தண்ணீர் திருட்டு தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது.

இது போன்ற பிரச்னைகளை களைய மாற்று திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. பிரதான, கிளை, பகிர்மான கால்வாய்களில், சொட்டு நீர் பாசன திட்டம் மூலமாக தண்ணீர் கொண்டு செல்வது நடைமுறைப்படுத்தலாம். இம்முறைப்படி, ஒரு மண்டலத்தில் கொடுக்கும் தண்ணீர், நான்கு மண்டலத்திலும் பகிர்ந்து கொடுக்க முடியும். தற்போது, ஒவ்வொரு மண்டலத்திற்கும் இரண்டாண்டிற்கு ஒரு முறை மட்டுமே தண்ணீர் வழங்கப்படுகிறது. இம்முறை நடைமுறைப்படுத்தினால், அனைத்து மண்டலத்திலும் தண்ணீரை அனைத்து விவசாயிகளுக்கும் பகிர்ந்து கொடுக்க முடியும்.

வழிகாட்டும் வெறுவேடாம்பாளையம்: இதன் முன்னோடித்திட்டமாக வெறுவேடாம்பாளையம் கிளைக்கால்வாயில், முதல் மற்றும் மூன்றாவது மண்டல பாசனத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த கிளைக்கால்வாயில், 4,131 ஏக்கர் நிலங்கள் பாசனம் மூலம் பயன்பெறுகின்றன. இந்த கிளைக்கால்வாயில், 5 மற்றும் 7வது மதகுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில், வேளாண் பொறியியல் துறை மூலமாக உலக வங்கி நிதியுதவியுடன், ஒன்றரை கோடி ரூபாய் செலவில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. நிலங்களில், விவசாயிகள் குழி தோண்டும் இடத்தில் தொட்டி கட்டப்பட்டது. பின், பாசன மதகுகளிலிருந்து, குழாய் மூலமாக தொட்டிகளுக்கு கொண்டு வரப்படும் பாசன நீர் பம்ப் செட் மூலம் எடுத்து விளை பயிர்களுக்கு பயன்படுத்தப்பட்டது. இம்முறையில், பம்ப் செட் வைத்திருந்த விவசாயிகள் பயன்பெற்றனர்.

இம்முறையில், 150 ஏக்கர் நிலங்கள் முழு அளவு பாசன வசதி பெற்றதுடன், போதுமான தண்ணீரும் இருப்பு வைக்க முடிந்ததாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. பகிர்மான வாய்க்கால் விவசாயிகள் இரண்டாண்டாக இந்த முறையை பின்பற்றி வருகின்றனர். இதில், பம்ப் செட் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே பயன்பெறும் நிலை உள்ளதால், இம்முறையிலும் மாற்றம் செய்து திருமூர்த்தி அணையிலிருந்து வழங்கப்படும் பாசன நீரையே குழாய் மூலம் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இதற்கு முன்னோடித்திட்டமாக வரிவேடாம்பாளையத்தை கணக்கில் எடுத்து, கொண்டு வர வேண்டும் என விவசாயிகளிடையே எதிர்பார்ப்பு நிலவுகிறது.

முன்னாள் வேளாண்மை பொறியியல் துறை கண்காணிப்புப்பொறியாளர் சாமியப்பன் கூறியதாவது: தமிழக அரசு விவசாயத்தை பாதுகாக்க, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, பி.ஏ.பி., பாசன விவசாயிகள் பயன்பெறும் வகையில்,'பி.ஏ.பி., கால்வாயில், சொட்டு நீர் பாசனம்' திட்டம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம். பி.ஏ.பி., பாசனத்தில், சொட்டு நீர் பாசனம் முறை கொண்டு வந்தால், அனைத்து மண்டலத்திலும் அனைத்து விவசாய நிலங்களுக்கும் தண்ணீர் பகிர்ந்து வழங்கலாம். ஒவ்வொரு ஏக்கருக்கும் ஒரு நாளைக்கு, 6,000 லிட்டர் வீதம் தண்ணீர் வழங்க முடியும். இந்த திட்டம் மூலம் ஆண்டிற்கு 270 நாட்களுக்கு மேல் தண்ணீர் வழங்கலாம். அளவுமானி வைத்து, ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும் தண்ணீரை அளந்து வழங்கலாம். இந்த திட்டத்தை முன்னோடி திட்டமாக அரசு கம்பாலப்பட்டி வாய்க்காலில், அனைத்து மண்டலத்திலும் சொட்டு நீர் பாசன திட்டம் செயல்படுத்த வேண்டும். இம்முறை நடைமுறைப்படுத்தினால், மின்சாரம் சேமிக்கப்படும்; நிலத்தடி நீர்மட்டம் உயருவதுடன், இருபோக சாகுபடியும் மேற்கொள்ளலாம். வறட்சி காலங்களில், தென்னை மரங்களுக்கு பிரச்னை இருக்காது. தேவைப்படும் இடங்களில், சோலார் பம்பு அமைக்கலாம். இத்திட்டம் குழாய் மற்றும் சோலார் பம்புடன் அமைக்க வேண்டுமென்றால், 5 ஆயிரம் கோடி

ரூபாய் வரை செலவாகும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம். இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் மனு அளித்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

உடுக்கம்பாளையம் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தலைவர் பரமசிவம் கூறியதாவது:பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தில் 4 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்திலிருந்தும், ஆனைமலையாறு-நல்லாறு அணைத்திட்டங்கள் கட்டப்படாமல் உள்ளது. இந்த திட்டத்தில், முறையாக விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்க முடியாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது.எனவே சொட்டு நீர் பாசனம் மட்டுமின்றி, அணைத்திட்டங்களையும் இதனோடு சேர்த்து செயல்படுத்தினால், போதுமான தண்ணீரை இப்புதிய திட்டம் மூலம் விவசாயிகளுக்கு வழங்க இயலும். தொடர்ந்து, மத்திய, மாநில அரசுகள் இதுபோன்ற உன்னதமான பாசனத்திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாசன சங்கங்களிடம் நிதி ஆதாரம் இல்லை. இந்த புதிய திட்டத்தை அமல்படுத்தும் போது, அவை பாதுகாக்கவும்; பராமரிக்கவும் உண்டான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இத்திட்டத்தை சாத்தியப்படுத்தும் ஏதாவது இரண்டு கால்வாய்களில், 10 ஆயிரம் ஏக்கருக்கு குறையாமல் சோதனை அடிப்படையில் செய்து பார்க்க வேண்டும். இதுமாதிரியான திட்டங்களை தள்ளி போடாமல், பொதுப்பணித்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத்துறை, மின்சாரத்துறை, பாசன சங்க அமைப்புகள் ஆகியவை அடங்கிய கூட்டு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, இத்திட்டத்தை உடனடியாக துவங்குவதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன், வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: பி.ஏ.பி., வாய்க்காலில், சொட்டு நீர் பாசனத்திட்டம் என்ற திட்டத்தை செயல்படுத்த விவசாயிகள் பல

ஆண்டு கால கோரிக்கை வைத்து வருகின்றனர். இதற்கான முன்னோடித்திட்டத்தை பாசன சங்கங்களோடு இணைந்து வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை பல்கலைக்கழகம், பொதுப்பணித்துறையின் ஆலோசனைப்படி முன்னோடித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் கம்பாலப்பட்டி வாய்க்காலில், 2,4 மண்டலத்திலும்; தாளக்கரையில், 2,4 மண்டல பாசனத்திலும் வழங்கப்படும் தண்ணீரை அனைத்து மண்டல பாசன நிலங்களுக்கும் பகிர்ந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் செயல்படுத்த 30 கோடி ரூபாய் செலவாகும். இது குறித்து கருத்துரு தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்படும். அரசு அனுமதி அளித்தால், இந்த திட்டம் செயல்படுத்தப்படும்,' என்றனர்.

## பீஹாரில் இருந்து நாமக்கல்லுக்கு 2,650 டன் மக்காசோளம் வரத்து

**நாமக்கல்**: பீஹார் மாநிலத்தில் இருந்து, சரக்கு ரயிலில் எடுத்து வரப்பட்ட, தீவனப்பொருளான மக்காச்சோளம், லாரிகள் மூலம் ஏற்றிச் சென்று, சம்பந்தப்பட்ட குடோனில் இருப்பு வைக்கப்பட்டது. சேலம்-கரூர் ரயில் அகல ரயில் பாதை திட்டப்பணிகள், முழுமை அடைந்ததை தொடர்ந்து, கடந்த, 2013ம் ஆண்டு ஃபிப்ரவரி முதல், சரக்கு ரயில் போக்குவரத்து துவங்கியது. அதை தொடர்ந்து, ஆந்திரா, கர்நாடகா, பீஹார் போன்ற மாநிலங்களில் இருந்து, அரிசி, கோதுமை, மக்காச்சோளம் போன்ற அத்தியாவசிய பொருட்களும், கால்நடைகளுக்கு தேவையான தீவன பொருட்களும், ரயில் பெட்டிகளில் ஏற்றி வந்து, நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி வைக்கப்படுகிறது.அங்கு இறக்கி வைக்கப்படும் சரக்குகள், சம்பந்தப்பட்ட குடோன்களுக்கு லாரிகள் மூலம் எடுத்துச் சென்று இருப்பு வைக்கப்படுகிறது. அதன்படி, நேற்று, பீஹார் மாநிலம், கிஷான் கஞ்ச்சில் இருந்து, சரக்கு ரயில் மூலம், 41 பெட்டிகளில், 2,650 டன் மக்காச்சோளம், நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்தது.அவற்றை லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, சம்பந்தப்பட்ட குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு மானியத்தில் ஜிப்சம் வினியோகம்

**ராசிபுரம்**: "ராசிபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில், 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வழங்கப்படும்' என, உதவி இயக்குனர் வரதராஜூ தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை:ராசிபுரம் வட்டாரத்தில், நடப்பாண்டு காரிப் பருவத்தில், நிலக்கடலை பயிரிடப்பட்டதில், அவை பூக்கும் பருவத்தில் உள்ளது. நிலக்கடலை சாகுபடி விவசாயிகள் ஏக்கருக்கு ஜிப்சம் அடி உரமாக, 80 கிலோ, விதைத்த, 40 முதல், 45 நாளில், செடியின் ஓரமாக மண்ணிட்டு அணைக்க வேண்டும். கால்சியம் மற்றும் கந்தக சத்து குறைவாக உள்ள நிலத்தில், ஜிப்சம் இடுவதால் நல்ல பலனை பெறலாம். ராசிபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வினியோகிக்கப்படும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கிருஷ்ணகிரியில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி நகரில் நேற்று மாலை சுமார் அரை மணி நேரம் திடீர் மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை வழக்கமாக ஜூன் மாத இறுதியில் துவங்கும். அப்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்யும். இவ்வாறு, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பெய்யும் மழையை கொண்டு, மானாவாரி நிலங்களில் நிலக்கடலை விதைப்பு, ராகி விதைப்பு மற்றும் சிறு தானிய பயிர்கள் விதைப்பு பணியை விவசாயிகள் மேற்கொள்வர்.

ஆனால், இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை துவங்கியும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை பெய்வில்லை. இதனால், நிலக்கடலை விதைப்பு மற்றும் ராகி விதைப்புக்காக நிலங்களை உழவு ஓட்டி வைத்திருந்த, விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

கடந்த ஒரு வார காலமாக மாவட்டத்தில், வழக்கத்துக்கு மாறாக, அதிக

வெப்பக்காற்று வீசி வந்தது. இந்நிலையில், நேற்று பகல், 3 மணியில் இருந்து, கிருஷ்ணகிரி நகர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில், வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

கிருஷ்ணகிரி நகரில் மாலை, 4 மணி அளவில் திடீரென, இடியுடன் கூடிய மழை பெய்தது. சுமார் அரை மணி நீடித்த மழையால், சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதே போல், மாவட்டத்தில் பல இடங்களிலும் பரவலாக, மாலை, 4 மணி முதல் மழை பெய்துள்ளது. இந்த மழை, மேலும் இரண்டு நாட்களுக்கு தொடரும் பட்சத்தில் மானாவாரி நிலங்களில் ஈரப்பதம் அதிகரித்து, நிலக்கடலை மற்றும் ராகி பயிர் விதைப்பு தொடர முடியும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். வெப்பக்காற்று வீசி வந்த நிலையில், திடீர் மழை பெய்துள்ளதால், கிருஷ்ணகிரி முழுவதும் குளிர்ந்து காணப்பட்டது.

## உழவர் சந்தையில் வியாபாரிகள் தலையீடு தரமற்ற காய்கறி விற்பனையால் விரக்தி

**ஓசூர்**: ஓசூர் உழவர் சந்தையில், விவசாயிகள் கொண்டு வரும், காய்கறிகளை, மொத்த வியாபாரிகள் வாங்கி செல்வதால், தரமற்ற காய்கறிகளே மக்களுக்கு கிடைக்கிறது.
தமிழகத்தில், விவசாயிகள் தங்களது விளை பொருட்களை, இடைத்தரகர்கள் தலையீடு இல்லாமல், பொதுமக்களுக்கு குறைந்த லாபத்தில் விற்பனை செய்யும் நோக்கில், தி.மு.க., ஆட்சிக்காலத்தில் உழவர் சந்தை துவக்கப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட திட்டம் என்பதற்காக, உழவர் சந்தைக்கு, அ.தி.மு.க. அரசு முக்கியத்துவம் தரவில்லை. தற்போது, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தவிர, மொத்த வியாபாரிகள் மட்டுமே, உழவர் சந்தை மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழகத்தின், இரண்டாவது பெரிய உழவர் சந்தையான, ஓசூர் உழவர் சந்தைக்கு, தினமும் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகள்,

அதிகாலையிலேயே, வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்து வருகின்றனர். இதில், மீதமாகும் தரமற்ற காய்கறிகளை, பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றனர். உழவர் சந்தையில், விவசாயிகளிடம் இருந்து, அடிமாட்டு விலைக்கு வாங்கப்படும் காய்கறிகள், வெளிமார்க்கெட்டில் இரட்டிப்பு விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரே நேரத்தில், மொத்தமாக காய்கறிகள் விற்பனை செய்யப்படுவதால், தரமான காய்கறிகளை, வியாபாரிகளுக்கு, விவசாயிகள் விற்று விடுகின்றனர். உழவர் சந்தை அதிகாரிகளும், விவசாயிகளை கண்காணிப்பதில்லை. இதனால், உழவர் சந்தையில், குறைந்த விலையில், தரமான காய்கறிகள் கிடைத்தும், வியாபாரிகள் தலையீடு அதிகமாக இருப்பதால், பொதுமக்களுக்கு, தரமற்ற காய்கறிகளே கிடைக்கிறது.

ஒசூர் உழவர் சந்தை வேளாண்மை அலுவலர் மேகநாதன் கூறியதாவது: ஒசூர் உழவர் சந்தைக்கு, தினமும், 250க்கும் மேற்பட்ட விவசாயிகள், தங்களது, காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். ஆனால், உழவர் சந்தையில் இருந்து, மொத்த வியாபாரிகளுக்கு, காய்கறிகள் விற்பனை செய்யப்படுவதில்லை. ஒசூர் சுற்று வட்டார பகுதியில் உள்ள, காய்கறி வியாபாரிகள், உழவர் சந்தையில், தரமான காய்கறிகள் கிடைப்பதால், ஐந்து கிலோ வரை மொத்தமாக வாங்கி செல்கின்றனர். மற்றப்படி, மொத்த வியாபாரிகள் தலையீடு இல்லை. இடைதரகர்கள் தலையீடு உள்ளதா என்பதை கண்காணித்து வருகிறோம், என்றார்.

## காய்கறி சாகுபடி குறைவால் விலையில் "ஜெட் வேகம்'

**திருச்சி**: பருவமழை தவறியதால் ஏற்பட்டுள்ள சாகுபடி குறைவால், வெங்காயம் உள்பட காய்கறிகளின் விலை, ஜெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் மாறுப்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாக, கடந்த ஆண்டு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை.

நடப்பாண்டும் அதே நிலை தான். இதனால், காய்கறிகள் வரத்து நாளுக்குநாள் குறைந்து வருகிறது. திருச்சி காந்தி மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைகளுக்கு, கடந்த ஒரு வாரமாக எதிர்பார்த்த அளவில் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படவில்லை. இதனால், காய்கறிகளின் விலை அதிகரித்து வருகிறது. மஹாராஷ்ட்ரா மாநிலம் நாசிக், அகமத் நகர், சோனாப்பூர், கர்நாடகா மாநிலம் பெல்லாரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெரிய வெங்காயம், தமிழகத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. மஹராஷ்ட்ரா மாநிலத்தில், தற்போது பெரிய வெங்காயம் சீஸன் முடிவடை யும் நிலையில் உள்ளதால், வரத்து குறைந்துள்ளது.

கடந்த மாதம், 18 ரூபாய் வரை விற்ற பெரிய வெங்காயம், தற்போது, 28 ரூபாய்க்கு விற்கிறது. தக்காளி, 25ல் இருந்து, 30 ரூபாய்க்கும், கத்தரி, 40ல் இருந்து, 50 ரூபாய்க்கும், உருளை, 25ல் இருந்து, 30 ரூபாய்க்கும், வெண்டை, 35ல் இருந்து, 40 ரூபாய்க்கும், பீர்க்கங்காய், 45ல் இருந்து, 60 ரூபாய்க்கும், பச்சை மிளகாய், 40ல் இருந்து, 50 ரூபாய்க்கும், முள்ளங்கி, 30ல் இருந்து, 40க்கும், கேரட், 40 ரூபாயில் இருந்து, 60க்கும், பீன்ஸ், 60ல் இருந்து, 80 ரூபாய்க்கும், முட்டை கோஸ், 20ல் இருந்து, 30 ரூபாய்க்கும் விற்கிறது.
செடி முருங்கை, ஒரு கட்டு (25 கொண்டது), 90ல் இருந்து, 110 ரூபாய்க்கும், மர முருங்கை, 75ல் இருந்து, 80க்கும் விற்கிறது. சாதாரண பூண்டு, 90 ரூபாயில் இருந்து, 110 ரூபாய்க்கும், நீலகிரி பூண்டு, 130 ரூபாயில் இருந்து, 140 ரூபாய்க்கும் விற்கிறது.

**விவசாயிகளுக்கு அழைப்பு**

**தேனி**: தேனி தோட்டக்கலை அலுவலர்கள் கூறியதாவது: ஜுன், ஜுலை மற்றும் டிசம்பர், ஜனவரி மாதங்கள் தென்னை சாகுபடிக்கு ஏற்ற மாதங்கள் ஆகும். குட்டை மற்றும் நெட்டை, நெட்டை மற்றும் குட்டை ரகங்களை சாகுபடி செய்யலாம். தோப்புகளில் 25 அடி இடைவெளியிலும், வரப்புகளில் 20 அடி இடைவெளியிலும்

நடவு செய்யலாம். ஒரு எக்டேருக்கு 175 மரங்கள் நடலாம், இவ்வாறு கூறியுள்ளனர்.

தினமணி

**உற்பத்தியில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு ஆட்சியர் பாராட்டு**

**திண்டுக்கல்**:

நிலக்கடலை மற்றும் மக்காச்சோளம் சாகுபடியில், அதிகபட்ச உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு, ரொக்கப் பரிசு வழங்கி மாவட்ட ஆட்சியர் பாராட்டுத் தெரிவித்தார்.

வேளாண்மை துறை சார்பில், விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டது. இதில் நிலக்கடலை மற்றும் மக்காச்சோளப் போட்டியில் வெற்றி பெற்ற வேடசந்தூர் மற்றும் பழனி பகுதி விவசாயிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் ரொக்கப் பரிசு வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

சாதனை படைத்த விவசாயிகள்:

ஒரு ஹெக்டேரில் அதிகபட்சமாக 6800 கிலோ நிலக்கடலை உற்பத்தி செய்த வேடசந்தூர் அடுத்துள்ள தொட்டணம்பட்டியைச் சேர்ந்த ரா.அய்யப்பனுக்கு முதல் பரிசாக ரூ.15 ஆயிரமும், 5720 கிலோ நிலக்கடலை உற்பத்தி செய்த வேடசந்தூர் அடுத்துள்ள காமணம்பட்டி பெ. சுப்பையாவுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்கப்பட்டது.

இதேபோல் மக்காச்சோளம் பயிர் உற்பத்தில் ஹெக்டேருக்கு 27,180 கிலோ சாகுபடி செய்த பழனி அடுத்துள்ள பாலசமுத்திரத்தைச் சேர்ந்த செ. ராமசாமிக்கு ரூ.10 ஆயிரமும், அதே பகுதியைச் சேர்ந்த மா. ராம்குமாருக்கு 26,320 கிலோ உற்பத்தி செய்ததற்காக ரூ. 5 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட்டது.

இதுகுறித்து விவசாயிகள் ரா. அய்யப்பன் மற்றும் மா.ராம்குமார் ஆகியோர்

தெரிவித்தது:

இதுவரை முறையான வழிகாட்டுதலின்றி, உரங்களை பயன்படுத்தி வந்தோம். தற்போது முதல் முறையாக, வேளாண்மைத் துறை அதிகாரிகள் வழிகாட்டுதலும் இந்த வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது.

பயிருக்குத் தேவையான உரங்களை சரியான விகிதத்தில் பயன்படுத்தியதாலும், அடி உரமாக தொழு உரத்தினை பயன்படுத்தியதாலும், அதிகபட்ச உற்பத்தி சாத்திமானது என்றனர்.

## தரமான விதைகளை உற்பத்தி செய்ய வேளாண் அதிகாரி வேண்டுகோள்

**ராமநாதபுரம்**:
சான்று பெற்ற தரமான விதைகளை பயன்படுத்தி விவசாயம் செய்தால் விவசாயிகளுக்கு அதிகமான விளைச்சலும், லாபமும் கிட்டும் என ராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குநர் க.மோகன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நாம் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும் தரத்தினை எதிர்பார்க்கிறோம். சற்று விலை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை. பொருள்கள் தரமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இது மனித இயல்பு தரமான பொருள்களை மக்கள் எளிதில் அடையாளம் காணும் பொருட்டு அரசு பல்வேறு குறியீடுகளை நிர்ணயித்துள்ளது.

உதாரணத்துக்கு வீட்டு உபயோகப் பொருள்களுக்கு ஐ.எஸ்.ஐ.முத்திரை எனவும், தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை எனவும் வேளாண் விளை பொருள்களுக்கு அக்மார்க் முத்திரை எனவும் அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. இக்குறியீடுகளைக் கொண்டு நமக்குத் தேவையான தரமான பொருள்களை நாம் கொள்முதல் செய்கிறோம்.

இதே போல வேளாண்மைக்கு முக்கியமான முதல் இடுபொருளான விதைகளின் தரத்தினை நாம் எப்படி அறிந்து கொள்ள உதவியாக வருவது விதைச்சான்று துறையாகும். இத்துறையானது விதைகளுக்கு சான்று அட்டை கட்டி விற்பனை செய்வதற்கு பேருதவியாக இருக்கிறது. சான்று அட்டை கட்டிய விதைகள்

என்றால் தரமான விதை என்று அர்த்தம். விதைகளில் சான்று அட்டை கட்டும் முன்பு பல்வேறு தரக்கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விதைகளை விற்பனை செய்வோர் விதைகளை உற்பத்தி செய்திட முதலில் விதைப்பண்ணைகள் அமைப்பதுடன் விதைச் சான்றுத்துறையில் பதிவு செய்திட விண்ணப்பிக்கவும் வேண்டும்.

பதிவு செய்யப்படும் விதைப்பண்ணைகளில் சரியான விதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்று சோதனை செய்யப்படும். பின்பு உரிய விதைச்சான்று அலுவலர்களால் பண்ணைகள் உரிய காலங்களில் ஆய்வு செய்யப்பட்டு விதைகள் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்படுகிறதா என உறுதி செய்யப்படும். அவ்வாறு உறுதி செய்யப்பட்ட விதைகள் விதைச்சான்று அலுவலர்கள் முன்னிலையில் சுத்தம் செய்யப்பட்டு, சீலிடப்பட்டு, சோதனை செய்யப்பட்டு, கொள்கலன்களில் அடைக்கப்பட்டு அதன் பிறகே சான்று அட்டை கட்டப்படுகின்றன. விதை உற்பத்தியின் ஒவ்வொரு கால கட்டத்திலும் விதைகள் பல்வேறு கடுமையான தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. உழவர்கள் சான்று பெற்ற விதைகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும் எனும் உயரிய நோக்கத்தில் அரசு பல்வேறு மானியங்களை அளித்து வருகிறது. மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன் பெறுமாறும் விதைச்சான்று உதவி இயக்குநர் க.மோகன் அச்செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை உயர்வு

**பல்லடம்**:

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 75 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் புதன்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 78 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.60, சென்னையில் ரூ. 3.96.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 45.60 அடி

**ஈரோடு**:

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 45.60 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 51 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 950 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 3.4 டி.எம்.சி.

## ஒரே தண்டில் இரட்டைத் தாமரை விற்பனைக்கு வந்ததால் வியப்பு

**பவானி**:

பவானி சங்கமேஸ்வரர் கோவிலுக்கு விற்பனைக்கு வந்த ஒரே தண்டில் இரட்டை இலை போல் காட்சியளிக்கும் இரண்டு வெண்தாமரைப் பூக்களைப் பார்த்து பொதுமக்கள், பக்தர்கள் ஆச்சர்யம் அடைந்தனர்.

பவானியை அடுத்த ஆப்பக்கூடல் காமநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்தவர் பொம்முசாமி (36). கடந்த 9 ஆண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதியில் உள்ள குளங்களில் தாமரைப் பூக்களை பறித்து, பவானி சங்கமேஸ்வரர் கோவில் முன்பாக விற்பனை செய்து வருகிறார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் உள்ள ஒரு குளத்தில் வெண்தாமரைகளை சேகரித்து வந்த இவர், ஒரே தண்டில் இரு தாமரைகள் இருப்பதை கண்டு வியந்தார்.

தண்ணீருக்கு அடியிலிருந்து ஒரு தண்டு வளர்ந்து, மேலே வந்த பின்னர் வண்ணம் எதுவாக இருந்தாலும், ஒரு பூ மட்டுமே தாமரை பூக்கும்.

கோவிலுக்கு விற்பனைக்கு வந்த இந்த இரட்டைத் தாமரையை பொதுமக்கள்

பார்த்து வியந்தனர். இதுகுறித்து ஈரோடு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் குணசேகரன் கூறுகையில், ஒரு காம்பில் ஒரு பூ மட்டுமே தாமரை பூக்கும். லட்சத்தில் ஒரு பூ இவ்வாறு ஒட்டிப் பூக்கிறது. இரட்டை குழந்தைகள் ஒரே பிரசவத்தில் ஒட்டிப் பிறப்பது போன்ற அபூர்வமானது இந்தச் செயல் என்றார்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

**ஆரணி**:

ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக்கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி புதன்கிழமை நடைபெற்றது.

இப்பேரணியை திருவண்ணாமலை மாவட்ட கலால் ஆணையர் கே.சுபமணி கொடியசைத்துத் துவக்கி வைத்தார். இதில் கல்லூரி மாணவர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இப்பேரணி கோட்டை மைதானத்தில் துவங்கி பழைய பேருந்து நிலையம், பெரியகடை வீதி, எஸ்.எம்.ரோடு, மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் வழியாக வட்டாட்சியர் அலுவலகம் வரை சென்றது.

இதில் வட்டாட்சியர் துரை. மணிமேகலை, ஆரணி டிஎஸ்பி என்.மணி, கல்லூரி முதல்வர் முகமதுயூசுப், கல்லூரி திட்ட அலுவலர் தண்டபாணி, இன்ஸ்பெக்டர் விநாயகமூர்த்தி மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள், பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

**மகசூலை பெருக்க மண் ஆய்வு அவசியம்**

**பொன்னமராவதி**:

பொன்னமராவதி வட்டாரத்தில் பயிர் சாகுபடி மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளும் அதிக மகசூல் பெற மண் ஆய்வு செய்து உரமிடவேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் அறிவுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நமக்கு ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக்குறை, நோய்களை கண்டறிய நமது ரத்தத்தினை பரிசோதனை செய்து நமது உடல்நிலையை சரிசெய்து கொள்கிறோம்.

ஆனால் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து நமக்கு உணவளிக்கும் பயிர்களுக்கு தேவையான உர அளவை தெரிந்துகொள்ள மண் பரிசோதனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை.

இதனால் தேவைக்கேற்ப ரசாயன உரங்கள் பயன்படுத்தி பயிர் மகசூலை பெருக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

எனவே பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒவ்வொரு 3 ஆண்டுக்கும் ஒருமுறையாவது தங்கள் வயல்களில் மண்ணை பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

விவசாயிகள் மண்ணை பரிசோதனை செய்வதின் மூலம் மண்ணின் தரம், கார அமிலத்தன்மை, மண்நயம், சுண்ணாம்புநிலை, உப்பின்நிலை, மண்ணில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்கள் போன்ற விபரங்களை தெரிந்துகொள்ளலாம்.

மண் பரிசோதனை மூலம் ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் அளவை குறைத்து தங்களது நிலத்துக்கு தேவையான அளவு மட்டும் உரம் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்தி பயனடையலாம்.

மண் பரிசோதனை செய்ய ஒரு மாதிரிக்கு ரூ. 20 மட்டுமே வசூலிக்கப்படுவதால் 2011-12-ம் ஆண்டு மண் பரிசோதனை செய்த விவசாயிகள் அனைவரும் தற்பொழுது மீண்டும் மண் மாதிரிகளை சேகரித்து தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட உழவர் நண்பர்கள் மூலம் மண் ஆய்வு செய்து பயன் பெறலாம்.

## வீரிய ஒட்டு மக்காச்சோள சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

**நாகப்பட்டினம்**:

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கத்தரிப்புலம் கிராமத்தில் வீரிய ஒட்டு மக்காச்சோள சாகுபடிக்கான தொழில்நுட்பப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சிக்கல் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் இரா. ராஜேந்திரன்,

வேளாண் அறிவியல் நிலையத்தின் நிகழாண்டு திட்டங்கள் மற்றும் மழைநீர் சேகரிப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மண்ணியல் துறை உதவி பேராசிரியர் அ. அனுராதா, வீரிய ஒட்டு மக்காச்சோள சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கினார். தோட்டக்கலை உதவி பேராசிரியர் கோ. மாலதி, வீரிய ஒட்டு காய்கனி சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கினார். இந்தப் பயிற்சி முகாமில், கத்தரிப்புலம் உழவர் மன்றத் தலைவர் டி. வி. ராஜேந்திரன் உள்பட சுமார் 45-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சொட்டுநீர்ப் பாசன திட்டம்: மாவட்டக் குழு ஆய்வு**

**விழுப்புரம்**:

விழுப்புரம் மாவட்டத்தில் 1600 ஹெக்டர் பரப்பில் நடைபெறும் சொட்டுநீர்ப் பாசன செயல்பாடு குறித்து ஆட்சியர் வா.சம்பத் ஆய்வு செய்தார்.

விழுப்புரம் ஆட்சியரகத்தில் தேசிய சொட்டுநீர்ப் பாசனத் திட்ட மாவட்டக் குழு ஆய்வுக் கூட்டம், ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வயல்களில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதில் உள்ள பணி முன்னேற்றம் மற்றும் நிறுவனங்களில் மானியம் வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் 1258 விவசாயிகளின் வயல்களில் 1600 ஹெக்டேர் பரப்பில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ள விவரம் குறித்து ஆட்சியர் ஆய்வு செய்தார்.

கூட்டத்தில் விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் கே.ராஜு, வேளாண் அலுவலர் ஜானகிராம், இதர அரசுத்துறை அலுவலர் சார்பு உறுப்பினர்கள், சொட்டுநீர் பாசன நிறுவனங்களில் பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வரத்துக் கால்வாய் அழிப்பால் வறண்ட நவாப் குளம்!**

**செஞ்சி**:

நீர் வரத்துக் கால்வாய் அடைக்கப்பட்டதால், செஞ்சி நவாப் குளம் வறண்டு

காணப்படுகிறது. வரத்துக் கால்வாயை சீரமைத்து இக்குளத்தை மழைநீர் சேகரிப்பு ஆதாரமாக தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செஞ்சி பேரூராட்சி அலுவலகத்தையொட்டி, நவாப் குளம் உள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்குளம் மன்னர் காலத்தில் வழிபோக்கர்களுக்கு தாகம் தீர்ப்பதாய் இருந்தது.

கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு வரை கிருஷ்ணாபுரம், சிறுகடம்பூர், பெரியகரம் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வந்தது.

ராணிக்கோட்டையின் கீழுள்ள குழாய் குளம் மழைக்காலத்தில் நிரம்பி, அங்கிருந்து கால்வாய் வழியாக நவாப் குளத்தை வந்தடையும். இது மலையில் இருந்து ஊற்றெடுக்கும் சுனை நீர் கலந்த சுவை நீர் என்பதால் மக்கள் குடிநீராகவே பயன்படுத்தி வந்தனர்.

மழைக் காலங்களில் இக் குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகளவில் இருந்தது. ஆண்டு முழுக்கக் குளத்தில் நீர் நிரம்பி இருக்கும். இந்த நீரை குடிநீருக்கு பயன்படுத்த முடியாத நிலை இருந்தாலும், பெரியகரம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர, நவாப் குளம் முக்கிய ஆதாரமாக இருந்தது.

ஆனால், தற்போது இந்த குளத்துக்கு மழைநீர் வரும் கால்வாயை அடைத்து, அதில் பேரூராட்சி அலுவலக கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இதனால் மழைநீர் வரத்து அடியோடு பாதித்து, குளம் வறண்டு காணப்படுகிறது.

மேலும், தூர்வாருவதாகக் கூறி ஜேசிபி இயந்திரம் இறங்குவதற்காக குளத்துப் படிக்கட்டுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தூர்வாரும் பணிதான் நடந்தபாடில்லை. எனவே குளத்தின் நீர் வரத்து வாய்க்காலை மீண்டும் ஏற்படுத்த வேண்டும், குளத்தில் மழைநீர் பெருக்கி நிலத்தடி நீர்மட்டம் உயர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வலுத்துள்ளது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், பல நீராதாரங்கள் உரிய பராமரிப்பின்றி அழிந்து வருகின்றன.

ஆனால் நவாப் குளம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பல்லாண்டு காலமாக மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கி வந்தது. தற்போது இக்குளம் வரத்துக் கால்வாய் இன்றியும், பராமரிப்பின்றியும் தண்ணீர் நிரம்பாத நிலை உள்ளது.

பெருகி வரும் தண்ணீர் தேவையை உணர்ந்து, தமிழக அரசு மழைநீர் சேமிப்புத் திட்டத்தை மீண்டும் தீவிரமாக செயல்படுத்தி வரும் வேளையில், இயற்கையாய் அமைந்த இக்குளத்தை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பாக பயன்படுத்த வேண்டும், அதற்காகவாவது இக்குளத்துக்கு மழைக்காலத்தின் போது நீர் வரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம், பேரூராட்சி நிர்வாகம் எடுக்க வேண்டும் என்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**<u>குறைந்த தண்ணீர், அதிக மகசூல்: புதிய தொழில் நுட்பத்துடன் குழித்தட்டு காய்கறி நாற்றங்கால் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் கண்டுபிடிப்பு</u>**



அதிக மகசூல் தரக்கூடிய தரமான நாற்றுகளை புதிய தொழில் நுட்பமான குழித்தட்டை பயன்படுத்தி காய்கறி நாற்றங்கால்களை உற்பத்தி செய்து திருச்சி

தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் சாதனை படைத்தனர். இந்த புதிய தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

காய்கறி நாற்றங்கால்

தற்போது நிலவி வரும் நீர் பற்றாக்குறையால் திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் செய்து வருகின்றனர். இதற்காக காய்கறி பயிர்களை உற்பத்தி செய்ய அதிகளவு தண்ணீர் தேவைப்படுகிறது. இவ்வாறு, அதிக விலைக் கொடுத்து வாங்கும் வீரிய ஒட்டு விதைகள் பாதி முளைப்பது இல்லை. மேலும் இதன் மூலம் நடப்படும் நாற்றுக்கள் அதிக மகசூலை தருவது இல்லை என்றும், அதிகளவு பூச்சி தாக்குதலும் இருக்கிறது என்றும் விவசாயிகள் புலம்புகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டுதான் காந்திகிராம வேளாண் அறிவியல் மையத்துடன் இணைந்து திருச்சி தோட்டக்கலை மகளிர் கல்லூரி மாணவிகள் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூல் தரும் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். வாங்கிய அனைத்து விதைகளும் முளைக்க கூடிய வழிமுறையான குழித்தட்டுக்களை பயன்படுத்தி நாற்றுக்களை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை கண்டறிந்துள்ளனர்.

மாணவிகள் விளக்கம்

இந்த புதிய வழிமுறை குறித்து கல்லூரி மாணவிகள் ஹேமாசங்கரி, கனிமொழி, மோனிஷா, பிரபா, பிரேமலதா, சவுந்தர்யா ஆகியோர் கூறியதாவது:–

98 குழிகள் உள்ள பிளாஸ்டிக்கால் ஆன குழி தட்டுக்களில் சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் நார்கழிவுகளை பாதியளவு நிரப்பி அதில் ஒரு குழிக்கு ஒரு விதை என்ற அடிப்படையில் போட்டு பின்னர் தேங்காய் நார்கழிவுகளை நிரப்பி விட வேண்டும். அந்த குழிதட்டுகளில் காற்று போகா வண்ணம் பிளாஸ்டிக் பேப்பர்களால் மூடி வைத்துவிட வேண்டும்.

அடுத்த நாளே அனைத்து விதைகளும் முளைத்து விடும். தினசரி பூ வாளி மூலம் குறைந்த அளவு தண்ணீர் விட்டு வந்தால் 20 முதல் 25 நாட்களில் அனைத்து செடிகளும் ஒரே மாதிரியான வளர்ச்சியை பெற்றிருக்கும். அதனை அப்படியே எடுத்து வயல்களில் நடவேண்டும். இவ்வாறு நடும் நாற்றுக்கள் தரம் உயர்ந்து அதிக மகசூல் கிடைக்கிறது.

இவ்வாறு மாணவிகள் தெரிவித்தனர்.

இந்த புதிய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு காந்திகிராமத்தில் நடைபெற்றது. இந்த முகாமில், வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலைத் துறை தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார், திருச்சி தோட்டக்கலை மகளிர் கல்லூரி மாணவிகள் செய்முறை விளக்கத்துடன் பயிற்சி அளித்தனர். இந்த புதிய தொழில் நுட்பம் மூலம் தக்காளி, கத்திரி, புடலங்காய், பீர்க்கங்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களுக்கு நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

பூதப்பாடி ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.5¾ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை

பூதப்பாடி ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.5¾ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை ஆனது.

**<u>விவசாய விளைபொருட்கள்</u>**

**அம்மாபேட்டை** அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 13 ஆயிரத்து 200 தேங்காயை கொண்டு வந்து இருந்தனர். இதில் சிறிய 3 ரூபாய் 60 காசுக்கும், பெரிய தேங்காய் 13 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 88 ஆயிரத்து 594 ரூபாய்க்கு தேங்காய் விற்பனை ஆனது.

கொப்பரை தேங்காய் 59 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் 8 ஆயிரத்து 177 ரூபாய் முதல் 9 ஆயிரத்து 293 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 984 ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

ரூ.5¾ லட்சத்துக்கு விற்பனை

நிலக்கடலை 82 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் 3 ஆயிரத்து 560 ரூபாய் முதல் 4 ஆயிரத்து 900 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் 94 ஆயிரத்து 157 ரூபாய்க்கு நிலக்கடலை விற்பனை ஆனது. மக்காச்சோளம் 52 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் ரூ.1,350 முதல் ரூ.1,399 வரை ஏலம் போனது. மொத்தம் 69 ஆயிரத்து 263 ரூபாய்க்கு மக்காச்சோளம் விற்பனை ஆனது.

எள் 33 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் 9 ஆயிரத்து 763 ரூபாய் முதல் 10 ஆயிரத்து 403 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 904 ரூபாய்க்கு விற்பனை ஆனது.

இந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் 5 லட்சத்து 74 ஆயிரத்து 902 ரூபாய்க்கு விற்பனை ஆனது.

**காஞ்சீபுரம், செங்கல்பட்டில் பலத்த மழை**



**காஞ்சீபுரம்,**

காஞ்சீபுரத்தில் நேற்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை பலத்த மழை பெய்தது. சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அதே போன்று செங்கல்பட்டு, மற்றும் சுற்றுவட்டார பகுதியில் நேற்று இரவு 7½ மணியளவில் இடியுடன் பலத்த மழை பெய்தது. கூடுவாஞ்சேரியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஸ்ரீபெரும்புதூர், மதுராந்தகத்தில் லேசான மழை

**ஊட்டியில் பிரச்சினைக்குரிய நிலத்தில் கோத்தர் இன மக்கள் உருளைக்கிழங்கு பயிரிட எதிர்ப்பு**




**நீலகிரி** மாவட்டத்தில் தோடர், கோத்தர், குரும்பர், இருளர் உள்ளிட்ட ஆதிவாசி மக்கள் வசித்து வருகின்றனர். இதில் ஊட்டி-கூடலூர் சாலையில் உள்ள கிளன் மார்க்கன் பகுதியில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் வனப்பகுதி உள்ளது. இந்த வனப்பகுதி உள்ள இடத்திற்கு தோடர் மற்றும் கோத்தர் இன மக்கள் உரிமை கோரி வருகின்றனர். இதற்காக அவர்கள் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பிரச்சினைக்குரிய நிலத்தில் கோத்தர் இன மக்கள் விவசாய பணிகள் மேற் கொள்வற்காக உழுதனர்.

இது குறித்து தகவல் அறிந்த வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அங்கு நடைபெற்று வந்த பணிகளை தடுத்து நிறுத்தி னார்கள். மேலும் இந்த நிலத்தில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை கோத்தர் இன மக்கள் பிரச்சினைக்குரிய நிலத்தில் உருளைக்கிழங்கு பயிரிட்டு உள்ளனர். மேலும் நிலத்தை சுற்றி வேலி அமைத்து உள் ளனர். இது குறித்து தகவல் அறிந்த தோடர் இன மக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அங்கு அமைக்கப்பட்டு இருந்த வேலியை பிடுங்கி எறிந்து உள்ளனர். இதனால் இருதரப்பினர் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பைக்காரா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இரு தரப் பினரையும் சமாதானப்படுத் தினர். மேலும், இருதரப்பினர் கொடுத்த புகார் மனுக்களையும் பெற்றுக் கொண்டனர்.

**தஞ்சையில் இருந்து சேலத்திற்கு 1,250 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**



**தஞ்சையில்** இருந்து சேலத்திற்கு 1,250 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

சேமிப்பு கிடங்கில் இருப்பு

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக காவிரிடெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள் திகழ்கின்றன. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். தற்போது சம்பா அறுவடை பணி முடிவடைந்து குறுவை சாகுபடி பணி நடைபெற்று வருகிறது. மேலும் அறுவடை செய்யப்பட்ட நெல் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் உள்ள அரிசி ஆலைகளுக்கும், சேமிப்புக்கிடங்கிற்கும் அனுப்பி வைக்கப்படும்.

சேமிப்புக்கிடங்குகளில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்கு நெல் மூட்டைகள் சரக்கு ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். இது

தவிர தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளுக்கு அனுப்பப்படும் நெல் அரவை முடிந்ததும் தஞ்சையில் உள்ள பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை பகுதியில் உள்ள சேமிப்புக்கிடங்கில் கொண்டு வந்து அரிசியாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அப்படி இருப்பு வைக்கப்பட்டுள்ள அரிசி அங்கிருந்து வெளி மாவட்டங்களுக்கும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ரேசன்கடைகளுக்கும் பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்படும்.

1,250 டன் புழுங்கல் அரிசி

அதன்படி நேற்று தஞ்சையில் உள்ள பல்வேறு சேமிப்புக்கிடங்குகளில் இருந்து புழுங்கல் அரிசி மூட்டைகள் லாரிகள் மூலம் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கு நின்ற சரக்குரெயிலில் புழுங்கல் அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 25 ஆயிரத்து 200 மூட்டைகள் அடங்கிய 1,250 டன் புழுங்கல் அரிசி ஏற்றப்பட்டன. பின்பு இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து சேலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த புழுங்கல் அரிசி பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேசன் கடைகள் மூலம் வினியோகம் செய்யப்பட உள்ளது.

தினகரன்

**நெல், அரிசி வியாபாரிகள் சங்க செயற்குழு தீர்மானம் 60 வயது வணிகர்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்கவேண்டும்**

**குடியாத்தம்**, : குடியாத் தம் நகர நெல், அரிசி வியாபாரிகள் சங்க செயற்குழு கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் விநாயகம் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் திருநாவுக்கரசு, மதியழகன், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இணை செயலாளர் கிருஷ்ணன் வரவேற்றார். கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் ரவி, அன்பு, கோபி, லிங்கப்பா, லெனின் உள்ளிட்டோர்

கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தனியார் நிறுவனங்கள் கையில் உள்ள பெட்ரோல் பொருட்களின் விலை நிர்ணயத்தை நாட்டு மக்களை பாதுகாக்கும் வகையில் மத்திய அரசே ஏற்று பெட்ரோல் விலையை நிர்ணயிக்க வேண்டும்.

2006 உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டத்தை ரத்து செய்து, வணிகர்கள் எளிமையாக நடைமுறைப்படுத்தும் வகையில் உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

60 வயதான அனைத்து வணிகர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். வயதான வணிகர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும். என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிர்வாக குழு உறுப்பினர் சிவக்குமார் நன்றி கூறினார்.

## உற்பத்தி, வருமானம் பெருக்க பண்ணை மகளிருக்கான இலவச பயிற்சி வகுப்பு

**திருச்சி**, : உற்பத்தி மற்றும் வருமானத்தை பெருக்க விவசாய பண்ணை மகளிருக்கான இலவச பயிற்சி வகுப்பு நாளை (10ம் தேதி) முதல் துவங்குகிறது.

திருச்சி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு வரும் பல்வேறு பயிர்களில் நவீன தொழில்நுட்பங் களை கடைப்பிடிக்க விவசாயிகளின் உற்பத்தி மற் றும் வருமானத்தை பெருக் கும் நோக்குடன் இலவச பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிருக்கான பயிற்சி வகுப்பு நாளை (10ம் தேதி) முதல் 28ம்தேதி வரை யிலும், தொழில் முனைவோருக்கான பயிற்சி வகுப்பு 16 முதல் 25ம் தேதி வரையிலும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் அந்தந்த பகுதி கிராமங்களில் நடைபெறுகிறது.

நாளை (10ம்தேதி) மணிகண்டம் கோபுரப்பட்டி யில் மலர் சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து பயிற்சி வகுப்பு நடை பெறும். 14ம் தேதி சிறுக மணி வேளாண் அறிவியல் நிலையத்தில் பருத்தி சாகு படி தொழில்நுட்பங்கள் மற் றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை குறித்த பயிற்சி வகுப்பு நடை பெறும்.

பின்னர், 16ம் தேதி காட் டூரில் கரும்பு சாகுபடியில் மாவுபூச்சி மேலாண்மை குறித்தும், 18ம் தேதி திருப்பராய்த்துறை அணலையில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித் தும், 21ம் தேதி வையம்பட்டி யில் காய்கறி சாகுபடி

குறித் தும், 28ம் தேதி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வெங்காயம் சாகுபடி மற் றும் பயிர் பாதுகாப்பு குறித்தும் பயிற்சி வகுப்புகள் நடை பெறும்.

தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் சிறுக மணி வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறும். இதில் 16, 17ம் தேதி தோட்டக் கலை பயிர்களில் நாற்றாங் கால் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி, 23, 24ம் தேதி வாழைநார் பிரித்தெடுத்தல் மற்றும் வாழை நாரில் இருந்து கைவினைப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, 24, 25ம் தேதி காளான் வளர்த்தல் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது என சிறுக மணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மணிமேகலை தெரிவித்துள்ளார்.

முன்பதிவுக்கு

டயல் செய்யுங்க...

மேலும் இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் முன்பதிவு செய்வதற்கு, சிறுகமணி வேளாண் அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலுகத்தில் நேரிலோ அல்லது 0431-2614417 என்ற தொலை பேசியிலும் தொடர்பு கொள்ளலாம்.

**<u>அரூர் வாரச்சந்தையில் பலா விற்பனை அமோகம்</u>**

**அரூர்**, : அரூர் வாரச்சந்தையில் பலாப்பழம் விற்பனை சூடுபிடித்தது.

தர்மபுரி மாவட்டம் அரூரில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் நடைபெறும் வாரச்சந்தை பிரசித்தம். நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் சுற்றுபுறத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வந்து குவிந்தனர். வீட்டிற்கு தேவையான மளிகை, காய்கறிகள், ஜவுளி உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் வாங்கி சென்றனர். தற்போது பலாப்பழ சீசன் என்பதால் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையிலிருந்து அதிகளவில் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். வாரச்சந்தையில் 5க்கும் மேற்பட்ட இடங்களில் பழத்தை குவித்து வைத்து விற்பனை செய்தனர். அளவை பொறுத்து ஒரு பழம் ரூ50 முதல் ரூ150 வரை விற்பனை செய்யப்பட்டது.

பொதுமக்கள் மற்ற பொருட்களுடன் வீட்டிற்கு ஒரு பலாப்பழம் வாங்கிச்சென்றனர்.

## <u>எலுமிச்சை வரத்து அதிகரிப்பால் விலை சரிவு</u>

**சேலம்**, : ஆந்திர மாநில வரத்து அதிகரிப்பால் எலுமிச்சை பழத்தின் விலை குறைந்துள்ளது.

ஆந்திர மாநிலம் கூடுர், நெல்லூர், ராஜ்தூத், கடப்பா பகுதிகளில் இருந்து அதிகளவில் எலுமிச்சை பழங்கள் சேலம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வருகின்றன. அங்கு தொடந்து பெய்து வந்த மழையினால் தற்போது வரத்து அதிகரித்துள்ளது. இதனால் கடந்த வாரங்களில் ஒரு பழம் ரூ3 முதல் 5க்கு விற்கப்பட்டது. வரத்து அதிகரிப்பால் தற்போது ஒரு பழம் ரூ2 முதல் 3-க்கு விற்கப்படுகிறது. 3 பழங்கள் ரூ5க்கும் விற்பனை செய்யப்படுகிறது

இது குறித்து எலுமிச்சை பழ வியாபாரிகள் கூறுகையில், ஆந்திராவில் பெய்துள்ள மழையால் எலுமிச்சை விளைச்சல் நன்றாக உள்ளது. சேலம் மார்கெட்டுக்கு வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால் வழக்கமாக 200 மூட்டைகள் வரை வரும் எலுமிச்சை பழம் தற்போது 400 மூட்டைகள் வரை வருகிறது. இதனால் விலையும் சரிந்துள்ளது என்றனர்.

## <u>பாலக்கோடு மார்க்கெட்டில் காய்கறி வரத்து சரிவு</u>

**பாலக்கோடு**, : பாலக்கோடு சந்தைக்கு காய்கறி வரத்து சரிந்துள்ளது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு பகுதியில் தக்காளி மற்றும் காய்கறி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வயல்களில் அறுவடை செய்யப்படும் காய்கறிகளை பாலக்கோட்டில் உள்ள தினசரி சந்தைக்கு மொத்தமாக கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், சந்தைக்கு காய்கறி வரத்து சரிந்துள்ளது. இதனால், விலை உயர்ந்துள்ளது. காய்கறிகளின் கொள்முதல் விலை(ஒரு கிலோ) விவரம் வருமாறு:

கத்தரிக்காய் ரூ16, வெண்டைக்காய் ரூ22, பச்சை கத்தரிக்காய் ரூ18 முதல் ரூ22 வரை, பாகற்காய் ரூ25, பெல்ட் அவரை ரூ23 முதல் ரூ27 வரை, முள்ளங்கி ரூ10 முதல் ரூ12 வரை, புடலை ரூ14 முதல் தி15 வரை.

**<u>தக்காளி விலை உயர்வு கூடை ரூ400க்கு விற்பனை பாலக்கோடு, : பாலக்கோடு மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து சரிந்துள்ளது. இதனால், 17 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ400 ஆக விலை உயர்ந்தது.</u>**

**தர்மபுரி**, மாவட்டம் பாலக்கோடு பகுதியில் தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பெல்ரம்பட்டி, சீரியம்பட்டி, கரகூர், சோமனஅள்ளி, இளங்காலபட்டி, காட்டம்பட்டி, சோமனஅள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அறுவடை செய்யப்படும் தக்காளியை பாலக்கோட்டில் உள்ள தினசரி மார்க்கெட்டிற்கு விவசாயிகள் மொத்தமாக கொண்டு வந்து 17 கிலோ, 25 கிலோ கூடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த வார நிலவரப்படி தினமும் சுமார் 2 ஆயிரம் கூடை தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. நேற்றைய நிலவரப்படி ஆயிரம் கூடையாக சரிந்தது. இதனால், விலை உயர்ந்தது. கடந்த வாரம் ரூ240 முதல் ரூ260 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட 17 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி நேற்று ரூ400 ஆக விலை உயர்ந்தது. 25 கிலோ கொண்ட ஒரு பிளாஸ்டிக் கூடை ரூ600க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதன்படி, ஒரு கிலோ தக்காளி ரூ22 வரையிலும் கொள்முதல் செய்யப்பட்டது. வெளி மார்க்கெட்டில் இதன் விலை இரட்டிப்பாகும்.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், 'தக்காளி வரத்து சரிந்துள்ளது. அதேவேளையில் வியாபாரிகளின் வரத்தும் சரிந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது. நாமக்கல், தொட்டியம், முசிறி, தர்மபுரி, சேலம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த குறைந்த அளவிலான வியாபாரிகளே வந்துள்ளனர்,' என்றனர்.

தக்காளி விவசாயிகள் கூறுகையில், 'போதிய மழை இல்லாததால் விளைச்சல் குறைந்துள்ளது. மேலும், அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால் குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால், மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது,' என்றனர்.

**<u>இலவச கறவை மாடுகள் வழங்குவது எப்போது? விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>**

**கரூர்**, : கரூர் மாவட்டத்தில் இலவச கறவைமாடுகள் வழங்கும் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

தமிழக அரசு கிராமங்களில் பயனாளிகளை தேர்வு செய்து இலவச கறவைமாடுகள்

மற்றும் ஆடுகள் வழங்கும் திட் டத்தை செயல்படுத்தி வருகிறது. கரூர் மாவட்டத்தில் இதுவரை கறவை மாடுகள் வழங்கப்படவில்லை. ஆடுகள் மட்டுமே வழங்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, 2011-12ம் நிதியாண்டில் 1842பேருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கு 7,368 ஆடுகள் வழங்கப்பட்டது. 2012-13ம் நிதியாண்டில் 3,003 பேருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 12,012 கால்நடைகள் வழங்கப்பட்டது. 2013-14ம் நிதியாண்டில் 2,391 பேருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கு 9,564 கால்நடைகள் வழங்கப்பட்டன.

விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்தபிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில், சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் தமிழ்புத்தாண்டு தினத்தில் பரிசு வழங்கப்படுகிறது. இலவச வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் உற்பத்தித் திறனை பெருக்கவும், எடையினை அதிகரிக்கவும்,, கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையங்களிலும் இலவச மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகிறது.

கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து ஆடுகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம் இன்னும் அமலுக்கு வர வில்லை. மழைப்பொழிவு குறைந்த, தரிசுநில பகுதிகள் நிறைந்த கடவூர், தோக மலை, அரவக்குறிச்சி, பரமத்தி ஒன்றியங்களில் கால்நடை வளர்ப்புதான் பிரதான தொழிலாக உள்ளது. மாவட்டம் முழுவதிலும் உள்ள விசாயிகள் குறிப்பாக மேற்கண்ட வட்டாரத்தில் வசிக்கும் விவசாயிகள் இலவச கறவை மாடு கள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இதன்மூலம் பால் கொள் முதல் செய்து ஆவின் நிறுவனத்தின் பால் தேவையை யும் பூர்த்தி செய்யலாம் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

10ஆயிரம் ஏக்கரில் சாகுபடி அமராவதி அணை நீர் வருமா? காத்திருப்பில் பாசன விவசாயிகள்

**அரவக்குறிச்சி**, : அரவக்குறிச்சி பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்துள்ள அமரா வதி பாசன விவசாயிகள் அமராவதி அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் கரூர் மாவட்டம் வந்தடை யுமா என்று எதிர்பார்த்து காத்துக்கிடக்கின்றனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகில் அமைந்துள்ள அமராவதி அணை 90 அடி உயரமும், 3,039.92 மில்லியன் கன அடி மொத்தக் கொள்ளவும் உள்ளது. தற்போது அணை யின் நீர்மட்டம் 24.98 அடி உயரம் உள்ளது. அணைக்கு 54 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது, தண்ணீர் வெளியேற்றம் 600 கன அடியாக உள்ளது. தண்ணீர் இருப்பு 274.65 மிலிலியன் கன அடியாக உள்ளது.

இந்த அணையின் மூலம் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டத்தை சேர்ந்த பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெறுகின்றன. இதில் கரூர் மாவட்டத்தில் மட்டும் 17 ஆயிரம் ஏக்கருக்கு மேலும், அரவக்குறிச்சி வட்டத்தில் கொத்தப்பாளையம், அரசம்பாளயம், மூலப்பட்டி, ராஜபுரம் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்களில் அமராவதி பாசன விவசாயிகள் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வாழை, சூரியகாந்தி, மஞ்சள், பருத்தி, சோளம், கம்பு போன்ற பணப் பயிர்கள் பயிரிடுகின்றனர். அமராவதி ஆற்று நீரை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர். கரூர் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க பொதுமக்கள் மற்றும் பல்வேறு பொது அமைப்பினர் அமரா வதி அணையிலிருந்து தண் ணீர் திறந்து விட கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் இம்மாதம் 3ம் தேதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் அரவக்குறிச்சி பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யும் அமராவதி பாசன விவசாயிகள் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் கரூர் மாவட்டம் வந்தடையுமா என்று கவலையுடன் காத்துக்கிடக்கின்றனர். தற்போது அரவக்குறிச்சி பகுதி அமராவதி ஆற்றில் தண்ணீர் இல்லாமல் பாலைவனம் போல வறண்டு காணப்படுகின்றது.

**<u>விவசாயிக்கு நிவாரணம்</u>**

**கந்தர்வகோட்டை**,:புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் விலாரிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஏழை விவசாயி ரங்கராஜன். இவரது வீடு தீப்பிடித்து எரிந்தது. இதில் ரூ.15 ஆயிரம் பணம், ரூ.75 ஆயிரம் மதிப்புள்ள நகை, பாத்திரம், அத்யாவசிய பொருட்கள் எரிந்து விட்டது.

விவசாயி ரங்கராஜனுக்கு, அமைச்சர் சுப்பிரமணியன் உதவித்தொகையாக ரூ.5ஆயிரம், வேட்டி, சேலை வழங்கினார். அமைச்சருடன் கந்தர்வகோட்டை தாசில்தார் ரேணுகாதேவி, ஒன்றிய செயலாளர் ரங்கராஜன், புதுக்கோட்டை நகரச் செயலாளர் பாஸ் கரன், விலாரிப்பட்டி ஊராட்சி செயலாளர் முத்துக்குமரன், மாணவரணி பெரியசாமி ஆகியோர் இருந்தனர்.

**கால்நடைகளுக்கான தீவன பயிர் சாகுபடி விண்ணப்பிக்க அழைப்பு நாகைக்கு ரூ12 லட்சம் நிதி ஒதுக்கீடு**

**நாகை**, : நாகை மாவட்டத்தில் கால்நடை தீவன பயிர் சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழக அரசின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் நாகை மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டில் மாநில தீவின அபிவிருத்தி திட்டத்தை 50 ஏக்கரில் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.11 லட்சத்து 90 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பசுந்தீவனம் கால்நடைகளுக்கு குறைவில்லாமல் கிடைக்கும் நோக்கத்துடன் 100 சதவீத மானியத்தில் இறவையில் அதிக மகசூல் தரக்கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

நாகை மாவட்டத்தில் 50 ஏக்கர் பரப்பில் அதிக மகசூல் தரக்கூடிய புல் வகையை சார்ந்த கம்புநேப்பியர், ஒட்டுப்புல் ரகங்கள், கோ-3 அல்லது கோ-4 சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் வீதம் 100 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது. நீர் சேமிப்பு உபகரணங்களாகிய மழைத் து£வான்கள் 75 சதவீத மானியத்துடன் 10 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. அசோலா என்னும் பசும் பாசி வகை தீவன உற்பத்திக்காக 100 சதவீத மானியத்துடன் 350 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

அகத்தி விதைகள் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 20 ஏக்கர் நிலத்தில் அகத்தி உற்பத்தி செய்யவும், 100 சதவீத மானியத்தில் அகத்தி விதைகள் வழங்கப்பட உள்ளன. இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கால்நடைகளுக்கு தேவையான தீவனப்பயிர் சாகுபடி செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள கால்நடை நிலையங்களில் கால்நடை உதவி மருத்துவரிடம் எழுத்து மூலம் விண்ணப்பம் செய்து பயன்பெறலாம்.

இத்தகவலை மாவட்ட கலெக்டர் முனு சாமி தெரிவித்துள்ளார்.

<u>**வேளாண்மை வளர்ச்சி திட்டப்பணிகள் கலெக்டர் ஆய்வு**</u>

**தேனி**, :தேனி வட்டத்தில் நடந்து வரும் வேளாண்மை வளர்ச்சித் திட்டப்பணிகளை கலெக்டர் நேரில் ஆய்வு செய்தார்.

தேனி வட்டாரத்தில் உள்ள தர்மாபுரியில் வேளாண்மைத் துறை சார்பிலும், சீலையம்பட்டியில் தோட்டக்கலைத் துறை சார்பிலும், கூழையனூரில் வேளாண்மை பொறியியல் துறை சார்பிலும் வளர்ச்சித் திட்டப்பணிகள் நடந்து வருகின்றன. நேற்று தேனி கலெக்டர் பழனிசாமி இப்பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தர்மாபுரி கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் மாவட்ட நீர்வடிப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடந்து வரும் நீர்வடி மேலாண்மைத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு தடுப்பணைகளையும், இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்ட பழ மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள இடங்களையும் பார்வையிட்டார்.

ஆய்வு குறித்து கலெக்டர் பழனிசாமி கூறும்போது, 'சுயஉதவிக் குழுக்கள் தையல் இயந்திரம் மற்றும் மாவு அரைக்கும் இயந்திரம் ஆகியவை கொண்டு தொழில் செய்து நல்ல வருவாய் ஈட்டி வருவதால் மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கிடவும், சூரிய சக்தியுடன் கூடிய மின் மோட்டார்கள் அமைத்திட விவசாயிகளை ஊக்கப்படுத்திடவும், பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு தேவையான அரசு திட்டங்களை செயல்படுத்திடவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்(பொறுப்பு) ராஜன், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் முத்தையா, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.